ந.க.எ. 791 நாள் 7/12/05

செய்தி குறிப்பு

பொதுமக்களின் நலன் கருதி கீழ்க்காணும் செய்தி குறிப்பு வெளியிடப்படுகிறது.

வாகனங்களுக்கு பொருத்தப்படும் கண்ணாடிகளின் தரம் மற்றும் ஒளி ஊடுருவும் தன்மையின் சதவீதம் பற்றி மாநில அரசுகளுடன், மத்திய அரசால் நடத்தப்பட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

(i) அநேக மோட்டார் வாகனங்களில் முன்பக்கம் மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளில் கருப்பு வண்ணத்திலான நைலான் இழை பேப்பர்கள் ஒட்டுவது வழக்கமாகி வருவதனால், வாகன ஓட்டுநர் முன்பக்க கண்ணாடி மற்றும் பக்கவாட்டு கண்ணாடி வழியாக சாலை வழியினை சரிவர கவனித்து இயக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு, சாலை விபத்துக்கள் நடக்க வழிவகுக்கிறது. மேலும் சில சமுதாயச் சீரழிவு நிகழ்ச்சிகள் நடைபெறவும் இடம் அளிக்கிறது.

(ii) மேலும் மத்திய மோட்டார் வாகன விதி 1989 விதி 92-ல் வாகனம் கட்டுமானம் செய்வதற்கு சில விதிகள் நிரணயம் செய்யப்பட்டும், மத்திய மோட்டார் வாகன விதி 100 (2)-ல் வாகனங்களில் பொருத்தப்படும் கண்ணாடிகளின் தரம் மற்றும் ஒளி ஊடுருவும் தன்மையின் சதவீதம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) சமுதாய சீரழிவு நிகழ்ச்சிகள் வாகனங்களுக்கு உள்ளே நடைபெறாமல் தடுக்கவும், நாட்டின் நலன் கருதியும், மத்திய மோட்டார் வாகன விதி 100 (2)-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை கடுமையான முறையில் செயல்முறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

2) எனவே, வாகனங்களில் முன்பக்கம் மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகளில் கருப்பு வண்ணத்திலான நைலான் இழை பேப்பர்கள் ஒட்டுவது மாநிலம் முழுவதும் முற்றிலும் தடைவெய்யப்பட்டுள்ளது. வாகன பயனாளிகள் அனைவரும் மத்திய அரசின் இம்முடிவினை சரியான முறையில் பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள். வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களும் இப்பொருள் குறித்து செயலாக்கப்பணிகளை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

3) இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 177-ன்படி முதல் குற்றத்திற்கு ரூ.100/- அபராதமும், இரண்டாவது மற்றும் அதன் தொடர்ச்சியான குற்றங்களுக்கு ரூ.300/- அபராதமும் வசூலிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4) மேலும் இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 53 (1) (a) ன்படி போக்குவரத்து அல்லாத வாகனங்களைப் பொருத்தமட்டில் பதிவுச் சான்று தற்காலிக

தடை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் எனவும் போக்குவரத்து வாகனங்களுக்கு பதிவுச் சான்றின்மீது தற்காலிக தடை மட்டுமல்லாது தகுதிச் சான்றினை தற்காலிக தடை செய்ய தமிழ்நாடு மோட்டார் வாகனவிதி 119-ன்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-சி.பி.சிங்
சிறப்பு ஆணையர் மற்றும்
போக்குவரத்து ஆணையர்,
சென்னை-5.

//ஆணைப்படி//

மாநிலப் போக்குவரத்து அதிகாரியின்
நேர்முக உதவியாளர்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.